# அரையாண்டு பொதுத் தேர்வு - 2019

## பதினொன்றாம் வகுப்பு

## கணக்குப்பதிவியல்

பதிவு எண் : 

நேரம்: 3.00 மணி

மதிப்பெண்கள்: 90

அறிவுரை :

1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப் பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

### பகுதி - I

20 x 1 = 20

குறிப்பு : i) இப்பிரிவில் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ii) கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில் மிகவும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. நிதிநிலைக் கணக்கின் அடிப்படையாக விளங்குவது
   a) சமூகக் கணக்கியல் b) காரியதரிசிகளின் கணக்கியல்
   c) மேலாண்மைக் கணக்கியல் d) பொறுப்பு கணக்கியல்

2. வேறுபட்ட ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்
   a) நகர் நுழைவு வரி b) இறக்குமதி வரி
   c) துறைமுகக் கட்டணம் d) ஏற்றுமதி வரி

www.kalviexpress.in

3. GAAP என்பது
   a) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகள்
   b) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகள்
   c) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் வழிமுறைகள் d) (a) மற்றும் (c)

4. முன்கூட்டிச் செலுத்திய வாடகை ஒரு
   a) பெயரளவு கணக்கு b) ஆள்சார் கணக்கு
   c) சொத்துக்கணக்கு d) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு

5. இருப்பாய்வு என்பது ஒரு
   a) அறிக்கை b) கணக்கு c) பேரேடு d) குறிப்பேடு

6. இருப்பாய்வு கீழ்க்கண்ட எந்த கணக்குகளை உள்ளடக்கி இருக்கும்?
   a) ஆள்சார் கணக்குகள் மட்டும் b) சொத்துக் கணக்குகள் மட்டும்
   c) பெயரளவு கணக்குகள் மட்டும் d) அனைத்து கணக்குகளும்

7. விற்பனை ஏட்டில் பதிவு செய்வதற்கு பயன்படும் அடிப்படை ஆவணம்
   a) பற்றுக்குறிப்பு b) வரவு குறிப்பு c) இடாப்பு d) ரொக்க இரசீது

8. சிறிய செலவினங்களைப் பதியும் ஏடு
   a) ரொக்க ஏடு b) கொள்முதல் ஏடு
   c) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு ஏடு d) சில்லறை ரொக்க ஏடு

9. பின்வருவனவற்றுள் தவறான கூற்று எது? மாற்றுச்சீட்டு என்பது:
   a) எழுத்து வடிவிலான ஆவணம் b) எழுதுநரால் கையொப்பமிடப்பட்டிருக்கும்
   c) நிபந்தனையுள்ள ஆணை d) ஏற்குநரால் ஏற்கப்படுகிறது

10. வங்கி அறிக்கை என்பது
    a) ரொக்க ஏட்டின் ரொக்கப் பத்தியின் நகல் b) ரொக்க ஏட்டின் வங்கிப் பத்தியின் நகல்
    c) வங்கி புத்தகத்தில் வாடிக்கையாளர் கணக்கின் நகல்
    d) வணிகத்தால் விடுக்கப்பட்ட காசோலையின் நகல்

www.kalviexpress.in

11. கீழ்க்கண்ட பிழைகளில் எது இருப்பாய்வைப் பாதிக்காது?
   a) ஒரு கணக்கில் தவறாக இருப்புக் காட்டுதல்
   b) பேரேட்டில் எடுத்து எழுதும் போது தவறான கணக்கில் சரியான பக்கத்தில் பதிவு செய்தல்
   c) ஒரு கணக்கில் தவறாகக் கூட்டுதல்
   d) ஒரு பேரேட்டுக் கணக்கில் தவறான தொகையை முன்னெடுத்து எழுதுதல்
12. ஒரு நடவடிக்கை முழுவதுமே பதிவு செய்யப்படாத போது அது ________ எனப்படும்.
   a) விதிப்பிழை   b) முழுவிடு பிழை
   c) பகுதி விடுபிழை   d) இருமுறை பதிந்த பிழை
13. குறைந்து செல் மதிப்பு முறையில் தேய்மானத் தொகையானது
   a) அனைத்து ஆண்டுகளிலும் ஒரே மாதிரியாக இருக்கும்
   b) ஆண்டுதோறும் குறையும்   c) ஆண்டுதோறும் அதிகரிக்கும்
   d) ஆண்டுதோறும் சொத்தின் ஆரம்ப அடக்கவிலை மீது கணக்கிடப்படுகிறது.
14. வருவாயினச் செலவின் பலன் கிடைப்பது
   a) கடந்த காலத்திற்கு   b) எதிர் காலத்திற்கு
   c) நடப்பு காலத்திற்கு   d) எந்த காலத்திற்கும்
15. வங்கி மேல்வரைப்பற்று எதில் காண்பிக்கப்படும்?
   a) வியாபாரக் கணக்கில்   b) இலாப நட்டக் கணக்கில்
   c) பொறுப்புகள் பக்கத்தில்   d) சொத்து பக்கத்தில்
16. பொருத்துக:

| | |
|---|---|
| 1) கூலி | i) பொறுப்புகள் பக்கத்தில் |
| 2) சம்பளம் | ii) சொத்துகள் பக்கத்தில் |
| 3) கட்டடம் | iii) இலாப நட்ட க/கு |
| 4) கடன் | iv) வியாபாரக் க/கு |

   a) (1)-(iv), (2)-(iii), (3)-(ii), (4)-(i)   b) (1)-(iii), (2)-(iv), (3)-(i), (4)-(ii)
   c) (1)-(iii), (2)-(i), (3)-(iv), (4)-(ii)   d) (1)-(iv), (2)-(iii), (3)-(i), (4)-(ii)
17. நிகர இலாபம்
   a) முதல் கணக்கில் பற்று வைக்கப்படும்   b) முதல் கணக்கில் வரவு வைக்கப்படும்
   c) எடுப்புகள் கணக்கில் பற்று வைக்கப்படும்   d) எடுப்புகள் கணக்கில் வரவு வைக்கப்படும்
18. கொடுபட வேண்டிய செலவு தோன்றுவது
   a) வியாபாரக் கணக்கில் வரவு பக்கம்   b) இலாப நட்டக் கணக்கில் வரவு பக்கம்
   c) இருப்புநிலைக்குறிப்பின் சொத்துகள் பக்கம்   d) இருப்புநிலைக் குறிப்பின் பொறுப்புகள் பக்கம்
19. பின்வருவனவற்றில் எது கணினி அமைப்பின் கூறு அல்ல?
   a) உள்ளீட்டு அலகு   b) வெளியீட்டு அலகு   c) தரவு   d) மையச் செயல்பாட்டு அலகு
20. கணினிமயக் கணக்கியல் முறையின் குறைபாடுகளில் ஒன்று
   a) கணினி அமைப்பு செயலிழத்தல்   b) துல்லியத்தன்மை   c) பலதுறைப் புலமை   d) தேக்ககம்

## பகுதி - II

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி: (வினா எண்.30 கட்டாய வினா)**

7 x 2 = 14

21. கணக்கியல் செயல்பாட்டிலுள்ள படிநிலைகள் யாவை?
22. அனாமத்துக் கணக்கு என்றால் என்ன?

www.kalviexpress.in
www.kalviexpress.in
www.kalviexpress.in

23. பின்வரும் குறிப்பேட்டுப் பதிவுகளுக்கான விளக்கக் குறிப்பு தருக.

**குறிப்பேட்டுப் பதிவுகள்**

| நாள் | விவரம் | பே.ப.எ. | பற்று ரூ. | வரவு ரூ. |
|---|---|---|---|---|
| 2018 ஏப்ரல் 1 | ரொக்க க/கு ப<br>ஷியாம் முதல் க/கு<br>(.........................) | | 30,000 | 30,000 |
| 2nd | வங்கி க/கு ப<br>ரொக்க க/கு<br>(.........................) | | 27,000 | 27,000 |

24. 2018 ஜனவரி 1 இல் தொடங்கும் ஆண்டிற்கான தொடக்க இருப்பினை உரிய குறிப்பேட்டில் பதிவு செய்க.

| | | | |
|---|---|---|---|
| ரொக்கம் | ரூ.50,000 | சரக்கிருப்பு | ரூ.25,000 |
| பற்பல கடனாளிகள் | ரூ.15,000 | பற்பல கடனீந்தோர் | ரூ.10,000 |

25. கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டு ராம் நிறுவனத்தின் டிசம்பர் 31, 2018ம் நாளுக்குரிய வங்கிச் சரிகட்டும் பட்டியலைத் தயார் செய்க.
   a) ரொக்க ஏட்டின் படியான வரவிருப்பு ரூ.24,000
   b) ரூ.2,400 மதிப்புள்ள காசோலை விடுத்து செலுத்துகைக்காக முன்னிலைப்படுத்தப்பட்டது. தவறுதலாக ரொக்க ஏட்டில் ரூ.4,200 என வரவு வைக்கப்பட்டது.
   c) வங்கி அறிக்கையின் பற்றுப்பக்கம் ரூ.200 குறைவாகக் கூட்டப்பட்டது.

26. பகுதி விடுபிழை என்றால் என்ன?

27. தேய்மானம் கணக்கிடும் முறைகளில் ஏதேனும் நான்கினை எழுதுக.

28. கீழ்க்கண்ட விவரங்களில் இருந்து காமேஷ் ஏடுகளில் வியாபாரக் கணக்கினைத் தயாரிக்கவும்.

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| தொடக்க சரக்கிருப்பு | 1,500 | கொள்முதல் | 3,500 |
| விற்பனை | 5,000 | இறுதிச் சரக்கிருப்பு | 1,300 |

29. வன்பொருள் என்றால் என்ன?

30. எந்த தேய்மான முறையில் ஒரு சொத்தின் மதிப்பு பயனளிப்பு காலம் முடிவடைந்த பிறகு பூஜ்ஜியமாக இருக்கும்? எப்போது?

## பகுதி - III

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி: (வினா எண்.40 கட்டாய வினா)**

7 x 3 = 21

31. கணக்கியல் தகவல்களில் பின்வரும் பயனீட்டாளர்கள் ஏன் ஆர்வமாக உள்ளனர்?
   a) முதலீட்டாளர்கள் b) அரசு

32. இரட்டைப் பதிவு கணக்கியல் முறையின் பொன்னான விதிகளைத் தருக.

33. கணக்கியல் சமன்பாட்டினை நிரப்புக:

| | சொத்துகள் | = | முதல் | + | பொறுப்புகள் |
|---|---|---|---|---|---|
| a) | ரூ.2,00,000 | = | ரூ.1,10,000 | + | ? |
| b) | ? | = | ரூ.1,00,000 | + | ரூ.80,000 |
| c) | ரூ.2,40,000 | = | ? | + | ரூ.60,000 |

www.kalviexpress.in

34. பின்வரும் நடவடிக்கைகளிலிருந்து விற்பனை கணக்கு தயாரிக்கவும்.

| | | |
|---|---|---|
| 2018 ஜன | 1 | ரம்யா என்பவருக்கு ரொக்கத்திற்கு விற்றது ரூ. 8,000 |
| | 4 | சுதா என்பவருக்கு சரக்கை விற்று காசோலை பெற்றது ரூ. 5,000 |
| | 11 | ஜெயா என்பவருக்கு கடனுக்கு விற்றது ரூ. 16,000 |

35. ரொக்கத் தள்ளுபடிக்கும், வியாபாரத் தள்ளுபடிக்கும் உள்ள வேறுபாடுகள் எவையேனும் மூன்றினை எழுதுக.

36. நிலைச்சொத்து ரூ. 50,000 க்கு வாங்கப்பட்டது. தேய்மான விகிதம் ஆண்டுக்கு 15% குறைந்து செல் இருப்பு முறையில் முதல் இரண்டு ஆண்டுகளுக்கு தேய்மானத் தொகை கணக்கிடவும்.

37. நீள்பயன் வருவாயினச் செலவு என்றால் என்ன? இரண்டு உதாரணங்கள் தரவும்.

38. கீழ்க்கண்டவற்றுள் இருந்த நிகர இலாபம் அல்லது நிகர நட்டத்தினைக் கண்டறியவும்.

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| மொத்த இலாபம் | 12,000 | நிர்வாகச் செலவுகள் | 4,000 |
| சம்பளம் | 9,000 | உள் ஏற்றிச்செல் செலவு | 3,000 |
| பயிற்சி பெறுவோரிடம் பெற்ற தொகை | 5,000 | விளம்பரம் | 2,000 |

39. கீழ்க்கண்டவற்றுள் சரிக்கட்டுதல்களுக்குத் தேவையான சரிகட்டுப் பதிவுகள் தரவும்.

a) கொடுபட வேண்டிய கூலி ரூ. 2,000
b) இறுதி சரக்கிருப்பின் மதிப்பு ரூ. 6,000
c) எடுப்புகள் மீது வட்டி ரூ. 1,200

40. சித்தார்த் என்பவரின் 2018, டிசம்பர் 31-ஆம் நாள் இருப்பாய்வின் முதல் ரூ. 2,00,000 தரப்பட்டுள்ளது. வங்கி கணக்கில் ரூ. 50,000 உள்ளது.

சரிக்கட்டுதல் : வருமான வரி செலுத்தியது ரூ. 20,000

இவ்விவரங்கள் இருப்புநிலைக் குறிப்பில் எவ்வாறு தோன்றும் எனக்காட்டவும்.

## பகுதி - IV

7 x 5 = 35

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:**

41. a) பின்வரும் வணிக நடவடிக்கைகளின் விளைவுகளை கணக்கியல் சமன்பாட்டில் காண்பிக்கவும்.

i) சிபி ரொக்கம் ரூ. 40,000; சரக்குகள் ரூ. 24,000 மற்றும் இயந்திரம் ரூ. 16,000 த்துடன் தொழில் தொடங்கினார்.
ii) செல்வத்திடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது ரூ. 14,000
iii) செல்வத்திற்கு செலுத்தியது ரூ. 14,000
iv) ரூ. 10,000 மதிப்புள்ள சரக்கினை ரவிக்கு ரூ. 12,000 க்கு கடனுக்கு விற்றது.
v) கொடுபட வேண்டிய கூலி ரூ. 800

*(அல்லது)*

b) கீழ்க்கண்ட விவரங்கள் இருப்பாய்விலிருந்து பெறப்பட்டன. கடனாளிகள் ரூ. 15,000; வாராக்கடன் ரூ. 2,500

www.kalviexpress.in

கூடுதல் தகவல்கள்:

i) கூடுதல் வாராக் கடன் ரூ. 1,500 போக்கெழுதவும்.
ii) 5% வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்கப்பட வேண்டும்.

தேவையான சரிக்கட்டுப் பதிவுகள் தந்து, இவ்விவரம் இலாபநட்டக் கணக்கு மற்றும் இருப்புநிலைக் குறிப்பில் எவ்வாறு தோன்றும் எனக்காட்டவும்.

42. a) ஆர்யா என்பவர் ஜவுளி வியாபாரம் செய்யும் வியாபாரி. பின்வரும் நடவடிக்கைகளுக்கு ஜனவரி 2018-ல் குறிப்பேட்டினைத் தயாரிக்க.

1 வியாபாரம் தொடக்க ரொக்கமிட்டது ரூ.3,50,000

5 X நிறுவனத்திடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது ரூ.15,000

10 வங்கியில் செலுத்திய ரொக்கம் ரூ.20,000

15 சொந்த பயனுக்காக வங்கியிலிருந்து ரொக்கம் எடுத்தது ரூ.30,000

20 சரக்குகள் (மேசை விரிப்புகள்) அலுவலக பயன்பாட்டிற்காக எடுத்துக்கொள்ளப்பட்டது ரூ.1,000

www.kalviexpress.in

*(அல்லது)*

b) பின்வரும் விவரங்களிலிருந்து டிசம்பர் 31, 2017ம் நாளுக்குரிய வங்கிச் சரிகட்டும் பட்டியலை தயார் செய்க.

| | விவரம் | ரூ. |
|---|---|---|
| i) | வங்கி அறிக்கையின்படி இருப்பு | 6,000 |
| ii) | டிசம்பர் 28, 2017 அன்று வங்கியில் செலுத்திய காசோலை இன்னும் வரவு வைக்கப்படவில்லை. | 2,000 |
| iii) | டிசம்பர் 20, 2017 அன்று விடுத்த ரூ.10,000 காசோலையில் இன்னும் செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்படவில்லை | 3,000 |
| iv) | வங்கியில் நேரடியாக வசூலிக்கப்பட்ட கடனீட்டுப் பத்திரம் மீதான வட்டி ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை | 4,000 |
| v) | கட்டடம் மீதான காப்பீட்டு முனைமம் வங்கியால் நேரடியாக செலுத்தப்பட்டது | 1,000 |
| vi) | வங்கியால் தவறுதலாக வரவு வைக்கப்பட்ட தொகை | 500 |

43. a) பின்வரும் நடவடிக்கைகளை நேரடியாகப் பேரேட்டில் எடுத்து எழுதவும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 2017 ஜூன் | 1 | ரோகிணி ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | ரூ. | 5,00,000 |
| | 6 | ரொக்கத்திற்கு சரக்கு விற்றது | ரூ. | 80,000 |
| | 8 | முருகன் என்பவருக்கு கடனுக்கு சரக்கு விற்றது | ரூ. | 90,000 |
| | 15 | ரொக்கம் கொடுத்து சரக்கு வாங்கியது | ரூ. | 40,000 |

*(அல்லது)*

b) பின்வரும் நடவடிக்கைகளை குணா என்பவரின் தனிப்பத்தி ரொக்க ஏட்டில் பதிவு செய்க.

| | | | | |
|---|---|---|---|---|
| 2017 சனவரி | 1 | கையிருப்பு ரொக்கம் | ரூ. | 11,200 |
| | 5 | இரமேஷ் என்பவரிடம் பெற்றது | ரூ. | 300 |
| | 7 | வாடகை செலுத்தியது | ரூ. | 30 |
| | 8 | ரொக்கத்திற்கு சரக்குகளை விற்றது | ரூ. | 300 |
| | 10 | மோகனுக்கு செலுத்தியது | ரூ. | 700 |
| | 27 | அறைகலன் ரொக்கத்திற்கு வாங்கியது | ரூ. | 200 |
| | 31 | சம்பளம் கொடுத்தது | ரூ. | 100 |

www.kalviexpress.in

44. a) ராகுல் என்பவரது ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட கீழ்காணும் இருப்புகளைக் கொண்டு 31.3.2017 - ஆம் நாளுக்குரிய இருப்பாய்வு தயாரிக்கவும்.

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| கை ரொக்கம் | 14,000 | பெறுதற்குரிய மா.சீட்டு | 14,000 |
| பற்பல கடனாளிகள் | 10,800 | பற்பல கடனீந்தோர் | 23,600 |
| சம்பளம் | 13,600 | முதல் | 50,000 |
| வாராக் கடன் | 400 | கொள்முதல் | 90,000 |
| தொடக்கச் சரக்கிருப்பு | 30,800 | விற்பனை | 1,00,000 |

www.kalviexpress.in

*(அல்லது)*

b) பின்வரும் செலவினங்களை முதலின, வருவாயின அல்லது நீள்பயன் வருவாயினச் செலவினங்களா எனக் கூறவும்.

i) நிலம் வாங்குவதற்காக வழக்கறிஞருக்கு கொடுத்த சட்டச் செலவுகள் ரூ. 10,000

ii) புதிய பொருளைச் சந்தையில் அறிமுகப்படுத்த மேற்கொண்ட பேரளவிலான விளம்பரச் செலவுகள் ரூ. 8,00,000

iii) தொழிற்சாலையில் உரிமம் புதுப்பித்தது ரூ. 16,000

iv) தொழிற்சாலையில் வண்ணம் பூசுவதற்கான செலவு ரூ. 5,000

v) பழைய கட்டடத்தை இடித்து புதிய கட்டடம் கட்டியது ரூ. 3,00,000

45. a) பின்வரும் நடவடிக்கைகளைக் கொண்டு 2018 ஏப்ரல் மாதத்திற்கான மோகன் ஆடையகத்தின் கொள்முதல் ஏடு மற்றும் விற்பனை ஏடு தயார் செய்க.

2018 ஏப்ரல் 1 வேலூர் அருணிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது.
ஒரு மீட்டர் ரூ.450 வீதம் 100 மீட்டர் சில்க் துணி
ஒரு மீட்டர் ரூ.180 வீதம் 75 மீட்டர் வெல்வெட் துணி

10 சென்னை இரத்தினத்திற்கு கடனுக்கு சரக்கு விற்றது.
ஒரு மீட்டர் ரூ.490 வீதம் 60 மீட்டர் சில்க் துணி
ஒரு மீட்டர் ரூ.210 வீதம் 50 மீட்டர் வெல்வெட் துணி

18 ஆனந்த் நிறுவனம் நம்மிடமிருந்து கடனுக்கு வாங்கியது.
ஒரு மீட்டர் ரூ.510 வீதம் 100 மீட்டர் சில்க் துணி

20 திருச்சி மணி துணியகத்திடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது.
கட்டு ஒன்று ரூ.730 வீதம் 50 கட்டுகள் காடாத் துணி
கட்டு ஒன்று ரூ.650 வீதம் 80 கட்டுகள் காலிக்கோ துணி

24 ஈரோடு பாபுவிடமிருந்து ரொக்கத்திற்கு வாங்கியது.
சட்டைத் துணிகள் மதிப்பு ரூ.7,000
சேலைகள் மதிப்பு ரூ.25,000

www.kalviexpress.in

*(அல்லது)*

b) கார்த்திக் என்பவரின் இருப்பாய்விலிருந்து 2017, டிசம்பர் 31 - ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார, இலாப, நட்டக் கணக்கு மற்றும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பு தயார் செய்யவும்.

| பற்று இருப்பு | ரூ. | வரவு இருப்பு | ரூ. |
|---|---|---|---|
| சரக்கிருப்பு (1.1.17) | 36,000 | பற்பல கடனீந்தோர் | 44,000 |
| அறைகலன் | 62,600 | முதல் | 50,000 |
| பற்பல கடனாளிகள் | 32,000 | விற்பனை | 1,60,000 |

| | | | |
|---|---|---|---|
| வங்கி ரொக்கம் | 6,000 | வெளித்திருப்பம் | 4,000 |
| கொள்முதல் | 80,000 | பெற்ற தள்ளுபடி | 2,200 |
| எடுப்புகள் | 1,000 | செலுத்தற்குரிய மா.சீட்டு | 10,600 |
| உள் திருப்பம் | 10,000 | | |
| சம்பளம் | 21,200 | | |
| கொள்முதல் மீதான ஏற்றிச்செல் செலவுகள் | 22,000 | | |
| | 2,70,800 | | 2,70,800 |

சரிக்கட்டுதல்கள்:

i) சம்பளம் கொடுக்கப்பட வேண்டியது ரூ.3,000

ii) இறுதிச் சரக்கிருப்பின் மதிப்பு ரூ.48,000

www.kalviexpress.in

46. a) தேய்மானம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை?

*(அல்லது)*

b) இரமேஷ் ஆடை நிறுவனம் ஏப்ரல் 1, 2015 அன்று ரூ.1,50,000 மதிப்புள்ள ஓர் இயந்திரத்தை நிஹா நிறுவனத்திடமிருந்து வாங்கியது. அதற்கு நிறுவுகைச் செலவாக ரூ.10,000 செலவழித்தது. குறைந்து செல் மதிப்பு முறையில் ஆண்டுக்கு 10% தேய்மானம் நீக்கப்பட்டது. முதல் மூன்று ஆண்டுகளுக்கு இயந்திரக் கணக்கு தயாரிக்கவும். கணக்குகள் ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 31-ல் முடிக்கப் பெறுகின்றன.

47. a) கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டு ரவி என்பவரின் ஏடுகளில் பாகுபடுத்தப்பட்ட சில்லறை ரொக்க ஏட்டினைத் தயாரிக்கவும்.

| 2017 செப்டம்பர் | | ரூ. |
|---|---|---|
| 1 | கையிருப்பு ரொக்கம் | 230 |
| | முன்பண மீட்புக்காக காசோலை பெற்றது | 2270 |
| 2 | அஞ்சல் செலவு செய்தது | 310 |
| 8 | இரயில் கட்டணம் செலுத்தியது | 280 |
| 10 | கணிப்பொறி பழுது பார்த்தது | 400 |
| 12 | அச்சுக் கட்டணம் செலுத்தியது | 500 |
| 16 | வாடிக்கையாளர்களுக்கு சிற்றுண்டி கொடுத்தது | 70 |
| 20 | பேனா மற்றும் மை வாங்கியது | 180 |

*(அல்லது)*

b) இருப்பாய்வு தயாரிக்கும் முன் கீழ்க்கண்ட பிழைகளைத் திருத்தம் செய்யவும்.

i) விற்பனை ஏட்டில ரூ.400 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.

ii) கொள்முதல் திருப்ப ஏட்டில் ரூ.700 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது.

iii) மணியிடம் கடனுக்கு ரூ.1,000 மதிப்புள்ள சரக்கு வாங்கியது ஏடுகளில் பதிவு செய்யப்படவில்லை.

iv) பெற்ற வட்டி ரூ.200 தரகுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

v) வினோத்திற்கு ரூ.10,000 மதிப்புள்ள சரக்கு கடனுக்கு விற்றது தவறுதலாக கொள்முதல் ஏட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

******

www.kalviexpress.in